உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

ஆண்டு ௯	யுவ—பங்குனி 1936—மார்ச்	திங்கள் ௮

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கு மருளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

நாட்டுக்கோட்டை நகரத்தார்சரித்திரம்.

(பாம்பரைத் திருப்பணிச்செல்வர் வழித்தோன்றல், அமராவதிபுதூர்
திருவாளர், வயி. நாக. ராம. இராமநாதச் செட்டியாரவர்கள்
எழுதியது.)

முன் புத்தகங்களின் விஷயச் சுருக்கம்.

இவர்களைப் பற்றிய வரலாறுகள் நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரமெனப் பெயர் பெற்று விளங்குகின்றது. இச்சரித்திரமானது பூங்கொன்றை வேலன்குடிக் கோவில் கல்வெட்டிலும், துளாவூர் மடத்தில் செப்பேட்டிலுமிருப்பதாக தேவகோட்டை, வித்துவான், மேலைவீட்டுச் சின்னையா செட்டியாரவர்கள் எழுதி வைத்திருந்த பிரதிக்கிணங்க 1904-ம் வருஷம் தஞ்சை சதாவதானம் சுப்பிரமணிய அய்யரவர்கள் ஓர் புத்தகமும், 1911-ம் வருஷம் மகிபாலன்பட்டி, பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் சீர்திருத்தம் என்று ஓர் புத்தகமும், 1919-ம் ௵ காரைக்குடி, சித்தாந்தச் செல்வர், சொக்கலிங்க ஐயா அவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபு விளக்கம் என்று ஓர் புத்தகமும் எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்நாட்டுக்கோட்டை நகரத்தார்களின்சரித்திரத்திற்கு ஆதாரமாயுள்ளவைகள் கண்ணுக்குக்காணப்படாத செப்பேடும் சிலாசாஸனமும் நிற்க, இம்மூன்று புத்தகங்களேயாம்.

இந்நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் முதலாவது நாக நாட்டில் "சாந்தியாபுரி" என்னும் நகரத்தில் நெடுங்காலம் வாழ்ந்து வந்தார்களென்றும், அவ்வூர் அரசன் கொடுமையால் கலியுகம் 204-வது வருஷத்தில் காஞ்சீபுரத்துக்கு வந்து குடியேறினார்கள் என்றும், அவ்வூரில் "2108" வருஷம் வாழ்ந்திருந்தவர்களை அவ்வூரரசன் கொடுமை செய்ததால் கலியுகம் 2312ம் வருஷத்தில் சோழதேசத்திற்கு வந்து காவிரிப்பூம்பட்டினத்தில் குடியேறினார்களென்றும், கலியுகம் 3775-ம் வருஷம் வரை (அதாவது 1463 வருஷகாலம்) அங்கே வாழ்ந்து கொண்டிருந்தவர்களைச் செய்த கொடுமையால் (8000) எண்ணாயிரம் குடும்பஸ்தர்களும் மனைவியர்களுடன் மானத்தைக் காக்கும் பொருட்டு பிராணஹானி செய்து கொண்டார்களென்றும், எஞ்சியிருந்த பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் ஒன்பது வருஷம் சென்று அதாவது கலியுகம் 3784ம் வருஷத்தில் பூவந்திச் சோழன் உயிரோடிருக்கையிலேயே அவர் மகன் இராஜ பூஷண சோழன் என்பவனால் அவனுக்கு முடிசூட்டும்நிமித்தமாக வேளாள ஜாதிப்பெண்களைக் கல்யாணம்செய்து கொண்டார்களென்றும், செளந்தரபாண்டியனென்பவனொருவனால் ஷை இராஜ பூஷணசோழனைக்கேட்டுகலியுகம் 3808ம்வருஷத்தில் சோழநாட்டிலிருந்து அழைக்கப்பட்டுவந்து இளையாத்தன்குடியில் குடியேறினார்களென்றும், கலியுகம் 3813ம் வருஷம் அதாவது இங்கிலீஷ் கி. பி. 712ம் வருஷத்தில் மாற்றூர்க் கோவிலையும், வயிரவன்பட்டிக் கோவிலையும், கலியுகம் 3815ம்வருஷம் அதாவதுஇங்கிலீஷ் கி. பி. 714ம்வருஷத்தில் இரணியூர்க் கோவிலையும், பிள்ளையார்பட்டிக் கோவிலையும், நேமம் கோவிலையும், இலுப்பைக்குடிக்கோவிலையும், கலியுகம் 3819ம் வருஷம் அதாவது இங்கிலீஷ் கி. பி. 718ம்வருஷத்தில் சூரைக்குடிக்கோவிலையும், வேலன்குடிக்கோவிலையும் விட்டுக்கொடுத்தாரென்றும், இளையாத்தன்குடிக்கோவிலை இளையாத்தன்குடிக்கோவிலார்களே வைத்துக்கொண்டார்களென்றும், கலியுகம் 4262ம் வருஷம் இங்கிலீஷ் கி. பி. 1161ம் வருஷத்தில் பூங்கொன்றை நாட்டு வேலன்குடியில் வசித்துக் கொண்டிருந்த நேமம் கோவில் அருணாசலம் என்பவனுடைய புத்திரி 5 வயதுள்ள முத்து மீனாக்ஷி என்பவளைக் காருண்ய பாண்டிய ராஜன் என்பவன் தூக்கிக்கொண்டு போன நிமித்தம் அவ்வூரை விட்டு விட்டு மாற்றூர் முதலிய இடங்களில் வந்து குடியேறினார்களென்றும், கலியுகம் 4389ம்வருஷம் அதாவது இங்கிலீஷ் கி. பி. 1288ம் வருஷம் அரியூர்ப்பட்டணம் எடுபட்டுப் போனதினால் அவ்வகையார் மலையாளத்தைச் சேர்ந்த கோட்டாற்றுக்குப் போய்விட்டார்களென்றும், கலியுகம் 4644ம் வருஷம் இங்கிலீஷ் ஷை 1543ம் வரு

ஷத்தில் நாட்டரசன்கோட்டையில் குடியிருக்கையில் கொள்ளை, கலகங்கள் ஏற்பட்டதென்றும்; கலியுகம் 4666ம் வரு இங்கிலீஷ் கி. பி. 1565ம் வருஷத்தில் பாதரக்குடி மடம் ஏற்பட்டதென்றும் இன்னும் பலவிதங்களாகவும் எழுதப்பட்டிருக்கின்றன.

பாதரக்குடியிலிருந்த நகரத்தார் சரித்திரத்திற்கும், கர்னபரம்பரைக்கும், சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுடைய அபிப்பிராயங்களுக்கும் சரித்திரங்கள் நடந்த இடங்கள் முதலியவைகள் கூட மிகவும் மாறுபட்டும் முன்னுக்குப் பின் விரோதமாகவும் இருந்தமைபற்றி இரணியூர், இளையாத்தன்குடி, எம்பெருமான் விண்ணகரத் திருக்கோவில் முதலிய கல்வெட்டுகளை ஆராய்ச்சி செய்தும், கீழச்சிவல்பட்டி பாடுவார் முத்தப்ப செட்டியார் திருமுக விலாஸம், பாதரக்குடியிலிருந்த சில செய்யுள்கள் இவைகளை ஆதாரமாக வைத்தும் இந்த நகரத்தார் சரித்திரத்தை எழுதியுள்ளேன்.

இதிலும் ஏதேனும் குற்றம் குறைபாடுகள் இருப்பதாகத் தெரிந்து தெரிவிப்பார்களாயின் அன்போடு ஏற்று அதற்குத் தக்கபடி செய்யவும் கட்டுப்பட்டிருக்கின்றேன்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம்.

சோழநாட்டின் தலைமை நகராகிய காவிரிப்பூம்பட்டினம், பூம்புகார், பட்டினம் என்று பலபெயர்களைப்பெற்று இந்திரன் உலகும் தனக்கு நிகரில்லை யென்று முன்னொரு காலத்தில் உலகமெல்லாம் புகழ் பெற்றிருந்தது. அக்காலத்தில் தனவைசியர் குபேரனும் பொறாமை கொள்ளத்தக்க பெருஞ் செல்வ வளத்தோடு சிவபக்தி அடியார் பக்திகளிற் சிறந்து அறத்தின் வழியே பொருளீட்டி ஒரு குறைவுமின்றி வாழ்ந்துவந்தார்கள்.

அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினமாவது இப்போதுகடற்கரைப் பட்டினமாகவும் இராஜதானிக்கு முதன்மைநகரியாகவு மிருக்கின்ற மதுராஸ்சென்னை என்றுசொல்லப்படுகிற சென்னைப்பட்டினம்போல் பிரபலமாய்ப் பிரசித்திப்பெற்றிருந்தது. இதன் பெருஞ்சிறப்பைச் சிலப்பதிகாரம், பெரிய புராணம் முதலிய பெருநூல்களில் பரக்கக் காணலாம். அறுபத்துமூன்றுநாயன்மார்களில்ஒருவராகியஇல்லையே யென்னாத இயற்பகை நாயனாரும், திருக்கைலாயமலைக்குத்தலையால் நடந்துசென்று கைலாஸபதியால் 'அம்மையே' யென்று அழைக்கப் பெற்ற பெருமை வாய்ந்த காரைக்காலம்மையாரும், மஹாசிவ ஞானியாராகிய பட்டினத்து சுவாமிகளும், வெட்டுண்டு இறந்த கணவனை எழுப்பிய கற்புடைப் பெருந் தெய்வமாகிய கண்ணகியம்மையாரும், இந்நகர்ப் பெருங்குடி வணிகமரபில் அவதரித்தவர்களென்றால் இந்நகர்ப் பெருமையையும் இக்குலத்தவர் பெருமையையும் எவ்வாறு எடுத்துரைப்பது?

முற்கால வாழ்க்கை நலம்.

மேற்கூறிய காவிரிப்பூம்பட்டினத்தில் தனவைசியர்கள் வளைவு கட்டி அதனுள் ஒவ்வொரு வீதிக்கும் ஒவ்வொரு ஊர்ப்பெயர்வைத்து வாழ்ந்துகொண்டிருந்தார்கள். கோட்டைகளென்பது இப்போது திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் தாலூகா கஸ்பா ஸ்ரீவை குண்டத்திலுள்ள கோட்டைபோல் மண்ணால் கட்டப்பெற்றுள்ளது. சோழராஜனுக்கு நகரத்தில் கோட்டையும், இவர்களுக்கு நாட்டில் கோட்டையுமாக விருந்ததால் நாட்டுக்கோட்டையாரென்றும், நெடுநாள் காவிரிப்பூம்பட்டினமாகிய நகரத்தில் தனவணிகர் நிலைபெற்றிருந்ததால் இந்நாட்டுக்கு வந்தபின் அதன் அறிகுறியாக நகரத்தாரெனவும் பெயர் பெற்றனர்.

(க) ஒருபிரிவினரான்:-1. ஒக்கூருடையார், 2. அரும்பூர்க்கிழார், 3. பெருமருதூருடையார், 4. கழனிவாசல் குடியார், 5. கிண்கிணிக்கூருடையார், 6. பேரசெந்தூருடையார், 7. சிறுசேற்றூருடையார் என்ற ஏழு வகுப்பினரும் திருவேட்பூருடையாரென்ற இரண்டு சகோதரர்களும் வாழ்ந்து வந்தார்கள்.

மேலே இரண்டாவதாகக் குறிக்கப்படும் அரும்பூர்க்கிழார் என்பவர்கள் பின்னர் பட்டண சாமியாரெனப் பெயர் பெற்றிருக்கின்றனர். அதை நோக்குமிடத்து மஹாசிவயோக சிவானுபூதிப் பெருஞ் செல்வரான திருவெண்காடர் என்பார் திருவவதாரம் செய்தபின் அவர்கள் பெயரை அக்குலத்தினோர் அடைந்திருக்கின்றனரென்று விளங்குகின்றது.

(உ) மற்றொரு பிரிவினரான:—1. உறையூருடையார், 2. அரும்பாக்கூருடையார், 3. மணலூருடையார், 4. மண்ணூருடையார், 5. கண்ணூருடையார், 6. கருப்பூருடையார், 7. குளத்தூருடையார் என்ற ஏழு வகுப்பினரும்,

(ங) மற்றொருபிரிவினரான சிறுகுளத்தூருடையாரென்கின்ற 1. பெரிய வகுப்பு, 2. தெய்வநாயகர் வகுப்பு, 3. பிள்ளையார் வகுப்பு என்னும் சகோதரர்களும் அடுத்தபடியான் கழனிவாசலுடையார், மருதேந்திரபுரமுடையார் என்னும் இரண்டு வகுப்பினரும் ஆக மூன்று வகுப்பினரும்,

(ச) மற்றொருபிரிவினரான ஊர்ப்பெயர் அறியப்படாத ஓர் வகுப்பினரும், (ரு) மற்றொருபிரிவினரான் சூடாமணிபுரமுடையாரென்ற ஓர் வகுப்பினரும், (சு) மற்றொருபிரிவினரான கழனிநல்லூருடையாரென்றஓர்வகுப்பினரும், (எ)மற்றொருபிரிவினரானபுகழ்வேண்டிய பாக்கமுடையாரென்ற ஓர் வகுப்பினரும் ஆக ஏழு வகுப்பினரும் தனித்தனியே வாழ்ந்துகொண்டு வந்தார்கள். (வரும்)

திருவெம்பாவைப் பாடலின் கருத்து.

(குற்றாலம் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர், திருவாளர்,
ப. சிங்காரவேல் பிள்ளையவர்கள்.)

மார்கழித் திங்களின் வைகறையில் கோயிற் பிணாப்பிள்ளைகளாகிய சிவத்தொண்டு செய்யும் மங்கைமார் பாவை நோன்பு கொண்டாடவேண்டுமென்று அவ்வொவ்வொருநாள் வைகறையினும் திரளாகக் குழுமி ஒவ்வொருநாளின் முன்னாள் இரவே தம்முள் முறை வைத்துக்கொண்டு அம்முறையே அக்கூட்டத்துள் ஒருவரே முன் துயில் எழுந்து ஒவ்வொரு மாதரையும் வைகறைப் பொழுதிலேயே துயிலெழுப்புவர் ஆவர். அங்ஙனமே துயிலெழுப்பப்பெறுகின்றவர்கள் எண்மராவர். எழுப்புவோர் ஒருவர் ஆவர். ஆகவே இதில் பாவைநோன்புநோற்போர் ஆவார் ஒன்பதின்மரெனப்படுவர் என்க. எனவே அவ்வெண்மரையும் துயிலெழுப்பின பின்னர் எல்லோரும் ஒரு திரளாய்க் குழுவுவர். இவர்கள் இறைவனையே வாழ்த்துவாராய் அவன்பெருமையாவும் எடுத்துப்புகழ்ந்து பாடிக்கொண்டு தூயநீராகிய சுனைநீர், தாமரைத் தடாகம் முதலிய நீர்நிலைகளில் போய் நின்று எம்பெருமான் புகழும் நாமமும் பாடிக்கொண்டு வைகறை நீராடல் செய்து குழுவி ஆங்குத் திருமுன் நின்று யாங்களெல்லோரும் உனக்கு அடிமை யாயினோம். இனி ஒரு குறையுமில்லோம். என்று முறையிட்டு வாழ்த்துக்கூறி வணங்கி வழிபடுவர் என்பது இதன் உட்கோள் என்க. இதுவே எம்பாவை நோன்பின் வரலா றென்பதுமாம்.

ஆதி. (க) இதன் விரிவுரைநடைவருமாறு:—

திருவெம்பாவை நோன்பு கொண்டாடுகின்றதொண்டர்களுள் ஒரு மாது முன்னாள்இரவில் மாதர்காள்! நாளை உங்களை நானே வந்து எழுப்புவன் என்று முறை பேசிக்கொண்டு தன் இல்லஞ் சென்றனள். அவ்வாறு சென்ற அம்மங்கை, "இன்று எனக்கருளி இருள் கடிந்து உள்ளத்தெழுகின்ற ஞாயிறே போன்று - நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்" என்றருளியவாறு புறத்தே தோன்றிய சுடரெல்லாம் தோன்றித் தோன்றிப்புறஇருளைப் போக்கிப் புறப் பொருளைக் காட்டி நின்றழிந்துபோம். அப்படியாகாது என் உள்ளத்துள்ளே தோன்றி நின்று அறியாமையாகிய அக இருளைப் போக்கி மெய்ப் பொருள் தானுந் தன்மை அறிவித்தருளி எஞ்ஞான்றும் ஆதியும் அந்தமும் இல்லாமல் நின்ற அருமை பெருமையான அகச்சுடரே எந்தலைவனாவானென்று நினைந்து கொண்டே துயின்றனள். துயின்ற அம்மங்கை அந்நினைவுடன் "தொழுதெழுவா"ளாகி அச்சோதியான பொருளையே "போற்றியென் வாழ்முதலாகிய பொருளே புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்டு-

ஏற்றி நின்திருமுகத்து எமக்கு அருள் மலரும் எழில்நகைகொண்டு நின் திருவடி தொழுவோம்'' என்று பாடிக்கொண்டே தன் கூட்டத்துள்ளார்களை அழைக்கச் சென்றனள். ஆங்கு ஆதியும் அந்தமுமில்லாத அரும் பெருஞ்சோதியான மாதேவனை வாழ்த்திய அவ் வாழ்த்தொலி அப் பெண் வந்த வீதியில் ஒலித்து நிற்கவே அக்கூட்டத்தள் அல்லளாகிய அத்தெருமாளிகையின் ஒரு சார் பூக்களாலான மெத்தையில் துயின்று கொண்டிருந்த மற்றொரு மங்கை, செவியில் கேட்ட அளவிலே அப்பேறு பெற்றிலேமே என்று அழுது அழுது தன்வச மிழந்து அப் பூவணையின் நின்று புரண்டனள். புரளவே தன் அறிவிழந்தமையால் இவ்வுலகில் ஒன்றற்கும் ஆகாதவளாய்க் கட்டிலின் நின்றும் கீழ் விழுந்துகிடந்தனள். அது பார்த்துக்கொண்டு எம்பெருமான் பெருமையை வியந்து சென்ற அம்மங்கையானவள், முன்குறிப்பிட்ட மாதின் வீட்டை அடுத்தனள். அவ்வில்லத்துள்ளே துயின்று கொண்டிருந்த தன் கூட்டத்துள்ளாள் ஒருத்தியை அழைக்கலுற்றனள்.

வாள்போலும் நீண்ட ஒளி பொருந்திய விசாலக்கண்ணுடைய மாதே! அடியேம் சோதிவடிவான மகாதேவன் திருவடிகளைப் பாடிக் கொண்டிருக்க அவ்வொலி கேட்டவுடன் துயிலொழிந்து வாராமல், கேட்டும் துயிலுகின்றாயோ? யாம் பாடக் கேட்ட நற் செவியுடைய மக்களானவர் துயிலார். ஆதலால் இவ்வாழ்த்தொலியைக் கேட்ட மற்றொரு மங்கையோ தன் வசமிழந்தனள் என்றால் நின்செவி வன்மையான மரச் செவியோ? இது என்ன வியப்பு! என்ன வியப்பு!! இதுவோ எங்கள் தோழியின் குணம்!!! என இகழ்ந்து கூறவே அம்மாது துயிலொழிந்து வந்தனள்.

பாசம். (உ)

அம் மாதையும் அழைத்துச் சென்ற மாதரசி மற்றொரு மாதின் இல்லத்தின் கடைவாயிற் சென்றனள். அம்மாதையும் துயிலெழுப்பத் தொடங்கினளாய் நேர்ந்த அணிகளைத் தரித்த மாதே! இரவும் பகலும் என் அன்பெல்லாம் அம்மேலான சுடராய் விளங்குகின்ற இறைவனுக்கே என்று சொல்லிக் கொண்டிருப்பாய். இப்போது அது ''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்'' என்பதுபோல் ஆகும். ஆனால் இனி நாம் நம் இறைவனைப் பேசுகின்ற காலந்தான் இவ்வைகன்ற ஒழிந்தால் எப்போது ஆம்? அவ்வாறு கூறிச் சென்ற நீ இப்போது உன் அன்பெல்லாம் பூக்களாலான படுக்கையின் மீது வைத்துவிட்டாயோ? என்று கூறினள். பின்னும் அம்மாது உடன் வந்த பிறமாதர்களைப் பார்த்து நேர்ந்த அணிகளை அணிந்த மாதர்காள்! வீணாக இவ்வாறு பொழுது கழிவனவும் சில ஆமோ? சீ, சீ. இது இகழத்தக்கனவேயாம். அங்ஙனம் ஆனால் நமக்குள்

ஒருவர்க்கொருவர் விளையாடிக் கொண்டு இழந்துபேசிக்கொள்ளுகின்ற இடமும் இவ்வைகறைப்போதுதானோ? வேறொன்றில் கூடாதா? ஏனென்றால் திருமால் அலரவன் முதலிய அமரரெல்லோரும் எம்பெருமானை வாழ்த்துவார்கள். ஆனால் அவர்கள் தாம் வாழும் பொருட்டன்றி அன்பினால் அவனைவாழ்த்துவது இல்லாமையால் அவர்கள் வாழ்த்தினுக்கு "பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்குநிற்பர் அவர் தமை நாணியே" என்றவாறு எம்பெருமானுடைய தாமரைப் பூப்போன்ற திருவடி நாணு நிற்கும் அத்தகைய திருவடிமலரை எம்பெருமான் தனது பெருங் கருணையால் அடியேங்கள் செய்யும் இந்நோன்பின் பயனாக எங்கள் தலையில் சூட்டியருள எழுந்தருளி வந்தருளுஞ் சோதிவடிவானவனவான். சிவலோகத்துள்ளவனும் அவனே. அன்பர்களுக்காகத் தில்லைச் சிற்றம்பலத்துள் நடிக்கும் தலைவனும் அவனே. அத்தகைய பெருமானுக்கு அன்புதான் எத்துணைத் தூரம்? நாம் தாம் எத்துணைத் தூரமாம்? என்று பேசிக்கொண்டிருக்கவேஅம் மாதுதுயிலொழித்து வந்தனள்.

முத்து. (௩)

அவ்விருவர்களும் கூடிவரவே அம்மாதரசி மற்றொருமாதின் இல்லகஞ்சென்று அழைப்பாளாய், அவ்வில்லத்தின் வாயிற் சென்றனள். அங்கு அம்மாதரசி, முத்துப்போன்ற வெள்ளிய பற்களையுடைய மங்காய்! எங்களுக்கு முன்னதாகவே எழுந்து எங்கள் எதிர் வந்து எம்பெருமானே என்னுடைய தந்தை; அவன் இன்பமே உருவானவன்; எனக்கு அமுது போன்றவன் என்று அள்ளூம்படி நீரூறிவாயில் தித்திப்புற எம்பெருமான் புகழையே பேசுவாய்! அவ்வார்த்தைக் கொப்ப இவண் பன்முறை கூவவும் துயில் எழுந்து வந்து உன் வாயிற் கதவைத் திறந்திலாய் என்றனள். அதன்பின் தம்மொடு வந்த மாதர்களைநோக்கி எம்பெருமானிடத்து அன்புடையார்களே! எம்பெருமானுக்குப் பழைமையான தொண்டர்காள்! என்பாலும் இப்பெண்பாலும் நட்புடையார்களே! என் தோழியோடு அன்பும் பழமையும் இல்லாது புதுமையாக அடிமையான என்னையும் என் போன்றாரையும் இழிவை அகற்றி எம்பெருமானே அடிமை கொண்டு விட்டால் அது இழிவாகுமோ? அது உயர்வாகுமோ? உரைப்பீர்களாக? என்று மீட்டும் அப்பெண்ணையே நோக்கிப் பெண்ணே! உன்னுடைய அன்புடைமையை யாங்கள் எல்லோருமே அறியமாட்டாமோ? ஆனால் நம் சிவபெருமானை மனம் அழகுடையார் (மனமாசற்றவர்) தாமே பாடமாட்டார்களா? இதற்குமேல் சொல்வானேன்! யாம் அழைக்காமலே பாடுவார்கள் அன்றோ? அது நிற்க. அறிவில்லாமல் துயிலெழுப்பவந்த எங்களுக்கு இவ்வளவும் வேண்டும்; என்று தங்களையே குறைத்துக் கூறிக் கொள்ளவே, அம்மாதும் துயிலொழிந்து வந்தனள்.

ஒண்ணித்திலம். (௪)

அம்மூவரையும் அழைத்துச் சென்ற அம்மங்கையர்க்கரசி வேறொரு இல்லஞ் சென்று ஆங்குத் துயிலும் தம் தோழியைக் கூவுகின்றுளாய், ஒளியையுடைய முத்துப்போன்ற பற்களையுடைய மாதே! இன்னும் விடிந்திலதோ? என்றாள். அதுகேட்ட அம்மாது அழகிய கிளிபோன்ற சொல்லுடைய மாதர்களான எல்லோரும் வந்தனரோ என்றாள் போலப் பின்னும் துயிலவே, அது நோக்கி யாங்கள் எல்லோரும் எண்ணிக்கொண்டு உள்ளபடியே சொல்லுவோம்; அவ்வளவு பொழுதும் நீ துயிலுற்று இவ்வைகறைப் போதை வீணே கழித்து விடாதே. ஆனால் பெண்ணே! என் சொல்வேன். விண்ணுலகத்தாருக் கெல்லாம் ஒப்பில்லாத அமுதாக உள்ளவன். அம்மட்டோ, நான்கு வேதங்களின் சிறந்த பொருளாயுள்ளவன். அங்ஙனமே ஆயினும் தன்கருணையால் அடியேங்கள் கண்ணுக்கு இன்பந்தருபவன். அத்தகைய பொருளை வாயால்பாடி மனம் உள்ளேயே கசிந்து நெகிழ்ந்து நிற்க யாங்கள் உருக வல்லேம் அல்லேம். அவ் அன்பு வல்லமை வாய்ந்த நீயே வந்து இப் பாவை நோன்பு நோற்க வந்த எல்லோரையும் எண்ணுக. உன் குறிப்பின்படி ஏதேனும் குறைந்தால் மீண்டு போய்த் துயிலுக! என்றனள். அம்மாதும் துயிலொழிந்து வந்தனள்.

மால். (௫)

அந்நால்வரையும் அழைத்துக்கொண்டே காரிகைக் கரசி மற்றொரு இல்லத்திற்குச்சென்று தன்பாங்கியாரில் மற்றொருத்தியைத் துயிலெழுப்பா நின்றனள்.

மாதே! திருமால் பன்றியாய்ப் பூமியை இடந்து அறியமாட்டாத அடியினையும், நான்கு முகங்களையுடைய பிரமனால் அன்னமாய்ப் பறந்து காண மாட்டாத முடியையுமுடைய அண்ணமலை வடிவாயுள்ள எம்பெருமானை நாமே அறிவோம் என்று பாலும் ஊறுகின்ற தேனும்போல் சுவைபட வாயால் உள்ள பொய்களையே சொல்லுகின்ற பொய்யுடையாளே! துயிலொழிந்து வந்து வாயிலைத் திறப்பாய்; எம்பெருமானோ இவ்வுலகமும் விண்ணுலகமும் பிறவுமாகிய எல்லாவற்றாலும் அறியப்படாதவன். அவ்விறைவன் திருவுருவமும், ஒன்றுக்கும் பற்றாத நம்மை ஆட்கொண்டருளிச் சீராட்டுகின்ற குணமும் ஆகியஇரண்டையும் யாமே வாயாரப்பாடிச் சிவனே சிவனே என்று அப்பெருமான் திருநாமத்தையும் பலமுறை வாயாற் சொல்லி ஓலமிட்டழைத்துக் கொண்டிருந்தாலும் நீயோ துயிலெழமாட்டாய் மணங்கமழ்கின்ற குழலுடையாளாகிய பெண்ணே! இதுதானோ நின் இயல்பு என்றாள். அம்மாதும் துயிலெழுந்துவந்தனள்.

(வரும்)

புலால் மறுத்தலும் சிவநெறியும்.

(அகுகூர், திரு, S. A. முத்தையாத் தேவர் அவர்கள்.)

உலகம் படைக்க உன்னிய கடவுள் பல்லுயிரையும் படைத்து, அவற்றை எழுவகைத் தோற்றத்துள் தோன்ற ஆணையிட்டனர்; "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் - பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் - கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் - வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் - செல்லாஅநின்றவித் தாவர சங்கமத்துள்" என்று வரும் திருவாசகமுங் காண்க.

அவ்வுயிர்கள் உயர்திணை அஃறிணை எனும் இருவகையுள் அடங்கும். "மக்கள் தேவர் நரகர் உயர்திணை-மற்றுயிருள்ளவும் இல்லவும் அஃறிணை" என்பர் இலக்கண நூலார். இவ்விரண்டும் ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் ஈறாக உள்ளவையாம். இதனை, "புன்மர முதலவற்றறிவு மோரறிவுயிர், முரணந்தாதி நாவறிவொ டீரறிவுயிர், சிதலெறும் பாதி மூக்கறிவின் மூவறிவுயிர், தும்பிவண்டாதி கண்ணறிவின் நாலறிவுயிர், வானவர் மக்கள் நரகர் விலங்குபுள் - ஆதி செவியறிவோ டையறிவுயிரே" என வருவனவற்றால் அறிக.

இதனானே, உயிர் நின்று இயங்குதற்கு உடலொன்று வேண்டும் என்பதும், அவ்வுடல் எழுவகைத் தோற்றத்துள் ஒன்றாம் என்பதும், உடல் இல்லாவிடின் உயிரின் விளக்கம் அறியப்படாதென்பதும், தோற்றத்துக்குத் தக்கவாறு அறிவின் முதிர்வு முறையே அதிகரித்து நிலையுறும் என்பதும், மக்களாவார் தேவர்க்கும் நரகர்க்கும் காரணர் என்பதும், இவற்றுள் மக்கள் சிறந்தனர் என்பதும் பெற்றாம்.

மேலும் "மக்கள் தேவர் நரகர்" எனக்கூறினபெரியார், வானவர் மக்கள் நரகர் விலங்கு புள் - ஆதிசெவியறிவோ டையறிவுயிரே என மிகுத்துக் கூறுகின்றார்; இவ்வாறு கூறுதல் "கூறியது கூறல்" என்றதின்பாற்படுமோ எனின்? படாதென்பதறிக. மற்று எற்றுக்குக் கூறினார் என்றால்? தோற்றம் எழில் இவ்வைந்தும், அறிவின் உயர்வு நோக்கி மீண்டும் கூறினார் என்க. இவ் வைவகைத் தோற்றமும், ஐயறிவுடைய பஞ்சேந்திரிய உணர்வைப் பெற்று நிகழ்தலை, கற்றோரன்றி மற்றோரும் அறிவர். இத்தன்மையை உணர்ந்த தொல்லாசிரியரும் நல்லாசிரியரும் ஆகிய தொல்காப்பியர் "மாவும் மாக்களும் ஐயறிவினவே" என்றார்; இச்சூத்திரத்துள் காணப்படும் உம்மை யிரண்டுள் முன்னது மிருகங்களுக்கும், பின்னது மிருகம், மக்கள் எனப்படும் இருதிணைக்கும் பொதுவாதலையும்

உணர்க்கா நிற்கும். இதனது உள்ளுறைப் பொருள் ஐயறிவிற்கு மேற்படாதவைகளை எல்லாம் மிருகத்தோடு சேர்த்துக் கூறுதல் வேண்டும் என்பதே. என்னையோவெனின்? பகுத்தறியும் தன்மை இல்லாத உயர்திணையும், அஃறிணையேயாம். ஆதலால்,

"மாவும்" என்று கூறியது; அஃறிணைப்பொருள்களாகிய, மாடு, ஆடு, புலி, சிங்கம் முதலியவைகளையும் பிறவற்றையுமாம். "மாக்கள்" என்றது; மிருகங்களையும், உயர்திணைக்கு முதலாகிய மக்களையுமேயாம். உயர்திணையை அஃறிணையோடு கூறியது செய்கையில் ஒத்து இருத்தலை நோக்கி என்பதை ஈங்குக் காண்பாம்.

அஃறிணைப்பொருள்களான சிங்கம், புலிமுதலியவைகள் மனிதர் முதலிய உயிர்ப்பிராணிகளைஉண்டு களித்துத்திரியும்பொருள்களாம். பசு, ஆடு முதலியவைகள் புல், தழை முதலியவைகளை உண்ணுகின்றன. அன்றியும் புலால்நாற்றம்வீசப்பட்டபுல் முதலியவற்றை உண்ணாது விலக்கிவிடுதலை யாவரும் அறிவர். மிருகங்களுள்ளும், புலாலுண்ணும் பிராணியும், புலால் மறுக்கும் பிராணியும் உண்டாகி இருத்தலை ஈங்குக் காண்க.

பறவைகளில், காகம், கொக்கு, கோழி முதலியவைகள் இறைச்சி முதலானவைகளைத் தின்னும் பிராணிகளாம். குயில், கிள்ளை, முதலானவைகள், மாங்கனிர் பழவர்க்கம் முதலானவைகளை முறையே உண்பவைகளாம். மற்றை ஐயுணர்வினையுடைய அஃறிணைப் பொருள்களும் இவைபோல்வனவேயாம். ஆகையாற்றான் உயர்திணைப்பொருளான மக்களையும் மிருகங்களோடு இணைத்துக் கூறினர். பட்சிகளுள்ளும் சைவப் பற்றுள்ளவைகளையும், அஃதில்லாதவைகளையும் இவண் அறிக.

மக்களுள், பல்லோர் மாமிசத்தை உண்பதையே கண்ணுங் கருத்துமாகக் கொண்டு ஒழுகிவருகின்றனர். அவர் மாமிசமன்றி உண்ணும் பொருள்களைப் பொருள்களாக மதிக்கின்றனரில்லை. அவர்கள் உருவில் மக்களேயன்றி செய்கையில் மேற்கூறிய இறைச்சியுண்ணும் மிருகங்களோடு சமமுற்றவர்களேயாவர். அதனாற்றான் "மாவும் மாக்களும்" என்றார். மேலும், இச்சூத்திரத்து "மக்கடாமே ஆறறிவுயிரே" என்றார்; இதுவும் "அறிவு அற்றங் காக்குங் கருவி" என்ற தேவர் வாக்கும்; "அறிவுளறிவை அறியுமவரும்" என்ற குமரகுருபரர் திருவாக்கும்; அறிவினால் மேன்மையான வழியைக் கண்டறிந்து, தீமையைக் கடத்தி, நன்மையை நடத்தி வருபவர்களை இவ்வாறு கூறினர் என்பதறிக.

மக்களாவார் நன்றியில் சிறிதும் குன்றாதவரேயாவர். "மக்களேபோல்வார்கயவர்" என்பது பொய்யாமொழி. இதனானே,

சயத்தன்மைவாய்ந்தோர் மக்களல்லர் என்பது பெறப்படும். தீமை செய்யாதும், நன்மையை அழியாதும், களவினைக்கருதாதும் விளங்கி நிற்போரையே மக்கள் என்றல் சாலும். "தன்னுயிர்க்கின்னாமை தானறிவான் என்கொலோ - மன்னுயிர்க் கின்னாசெயல்" என்ற தானே, பிறவுயிர்க்குத் தீங்கிழைப்போன் தன்மாட்டு அத்தீங்கு பிறரால் வரக்கூடா தெனக் கருதுவது எங்ஙனம் என்பது தோன் றும். தனக்கு எவ்விதத்தினும் தீங்கு நேராதிருக்கவேண்டும் என்று எண்ணுவோர்கள், பிறவுயிரைக் கொன்று அவ்வுயிர் நின்ற உடலை உண்ணுவது ஏன்? அஃது அஞ்சாமையன்றோ? தம்தாய் தாய், தந்தை, மக்கள், உறவினர்கள் இவர்களில் யாவரேனும் ஒரு வர் இறக்கக்கண்டால் அவரவர்க்குத் தக்கவாறு துன்புற்று நீராடு வோர்கள் பிறவான இறந்த உடலை உண்டபின் அதற்காக என் செய்கின்றனரோ அறிந்திலம். அன்னோர், "தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூ னுண்பான் - எங்ஙனமாளும் அருள்" என்பதாய் வரும் குறளினாலே விளங்குவதறிவாராக! நிலையற்ற வுடலைப் பெருக்கச் செய்தலை வேண்டி, இறப்பு பிறப்பு இலாது ஒரே நிலையைத் தந்து காத்துவரும் கருணையை இழப்பது அறி யாமையினும் அறியாமையேயாகும் என்பதாம்.

மேலும் "பொருளாட்சி போற்றாதார்க்கில்லை அருளாட்சி ஆங்கில்லை ஊன்றின்பவர்க்கு" என்பதில் அறியப்படுவதாவது:— தான் அடைந்த பொருளைக் காப்பாற்றாதிருந்தால், அடைந்த பொருள் வீணாகுமல்லவா? அதுபோல கருணையை விரும்பாதுஊன் தின்பவரை விட்டு, அருளாகிய பொருளும் நீங்கும் என்பதாம். ஆகையால், நிலையிலா யாக்கை பெருத்திருக்க வேண்டினர், தலை சிறந்த அருளை இழந்திருக்க நேர்ந்த இழிவை எங்ஙனம் கூறுவது?

அன்றியும், "தினற் பொருட்டாற் கொல்லாதுலகெனின் யாரும் - விலைப்பொருட்டால் ஊன்றருவாரில்" என்று கூறப்படும் கருத்தை நோக்குவோர்புலாலுண்ண எண்ணுவரோ? எண்ணார். இக் குறள், அறிவின் மிகுந்த பெரியார் ஒருவர், ஒருவரையோ, பல்லோ ரையோநோக்கி 'ஐயன்மீர்! நீங்கள்புலாலுண்ணுகின்றீர்களே உண் ணலாகுமா'? என்றார். அதுபோது அவர்கள் "உண்டாலென்ன, நாங்கள் கொல்லுகின்றோமா? விலைக்குவிற்போரிடத்துவாங்கி உண் ணுகின்றோம்", என்று மறுமொழி கூறுதல் போலும். கூறியுள்ள முறையை நோக்குங்கால், திருக்குறளாசிரியரைப் போலத்தெய்வத் தன்மை அடைந்தவர்க்கல்லது, மற்றையோர்க்கு இவ்வாறு கூறுந் திறமை அமையாதென்பது தெளிவாம். இங்கு மறுமொழிகேட்ட பெரியார் "நீங்கள் உண்ணாதிருப்பிரானால் விலைக்குக் கொடுப்பவர் காணப்பெறுவரோ?" என்றார். அதற்கவர் மறுத்துரைக்க வழி யிலாது 'இல்' என்றார். இக்குறள் வாக்குவாத முடிவின் பொருளை

அளித்து நிற்றலை அறிக! யாரும் என்றதை -யார் எனத் திரித்துப் பொருள் காண்க.

புலாலுண்ணார் பெறும்பேறும், வேள்வி புரிவோர் பெறும் பேறும் அடியில்வரும் குறட்பாவினால், உள்ளங்கை நெல்லிக்கனி தோன்றுவதுபோல் விளக்கமுறுவதைக் காண்க. அஃது, "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலி னொன்றன் - உயிர் செகுத்துண் ணாமை நன்று என்பதாம். இதில் ஆயிரம் என்றும், ஒன்றன் என்றும் எடுத்துகாட்டிய எண்கள், முறையே வேள்வி இயற்றுதற்கு அளவற்ற பொருள் தேடவேண்டும் என்பதும், புலாலுண்ணா மைக்கு அத்தகை தேடல் வேண்டா என்பதும், வேள்வி மிக்காயி னும் பயன் சிறிதென்பதும், புலாலுண்ணா விரதம் எண்ணிக்கையில் ஒன்றேயாயினும் பயன் பெரிதென்பதும் விளங்கி நிற்றல் வியக்கற் பாலது.

புலாலுண்ணாரை உலகத்துத்தோன்றிய உயிர்களெல்லாம் எவ் வாறு வணங்குகின்றன என்பதை இங்குக் காணலாம். "கொல் லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி - எல்லாவுயிரும் தொழும்" என்றமையானே, புலாலுண்ணும் தாய் தந்தையர்களிடத்துத் தோன்றியவர்களும் இஃது உண்ணற்குரிய பொருளல்ல என்றும், இது மக்களால் உண்ணப்படுதலைத் தடுத்துரைத்து அவர்களை உண் ணுதிருக்கும்படியும் அறிவுறுத்தவேண்டும் என்றும் தன்மையறிந்து உண்ணுதும், உண்பாரைத் தடுத்துமிருப்பாராகுல் அவர்கள் உயர் திணையன்றி அஃறிணை உயிர்களாலும் வணங்கப்படுவார்க ளென்றும் கடமை தோன்ற "கொல்லான் புலாலை மறுத்தானை" என்று கூறுவதால் மேற்கூறியவாறு தடுத்தவனைத் 'தொழும்' என்றார். இதில் "கொல்லான் புலாலை" என்றமையால்; உண் ணற்கு முதற்காரணம் கொல்லுதல் என்பதை எண்ணி, கொல்லா திருத்தல்வேண்டி, முன்னுல் கொல்லான் என்றுதொடங்கினார்என்ப தறிக. "கொல்லா விரதம் குவலயமெல்லா மோங்க - எல்லார்க்கும் சொல்லுவது என்னிச்சை பராபரமே" என்பர் தாயுமானவர். கொல்லாதிருக்க எண்ணியவுடன் உண்ணுதிருக்க எண்ணுவது, ஒருவருக்கு நினையாமலே உண்டாகும் என்ற துணிவு பற்றி, தாயு மானவர் இங்ஙனம் கூறினார் என்பது சொல்லாமே விளங்கும். புலாலை உண்ணுதும், ஒருயிரைக் கொல்லாதும் இருப்பவரைத்தான் பகுத்தறிவுடையர் என்றும், மக்கள் என்றும் கூறப்படும். "ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே" என்பதும் புலால் உண்ணுதிருத்தல்நன்றுஎன்பதைவிளக்கும். பகுத்தறிவுடையார்க்கு நலங்கூறவந்த பெரியார், புலாலுண்ணுமையோடு கொல்லாமையும் உடன் கூறியதனுல், இவ்விரண்டறமும் ஒருங்கே உடையார்க்கு அல்லது, இரண்டில் ஒன்றினை உடையார்க்கு, இவ்வோறம் பய

னைத் தாரதென்பது தோன்ற இரண்டனையும் ஒருங்கே கூறினர் என்பதை அறிஞர் அறிவர்.

இதனாலன்றோ? "மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்ற தொல்காப்பியர், மக்கள் என்றதின் உண்மைப் பொருளிலேயே விளக்க முற்றிப்போமை ஆறறிவுயிர் என்றார். பகுத்தறிவு உடையபொருள், உயிர்பெற்றபொருள்களில் சிறந்தனவாதல்நோக்கி, "உயிர்" என்று எடுத்தோதினர் என்பது உலகர் அறிவர். பகுத்தறியும் நிலை அற்றோரை,* "வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்" எனவரும் ஐவகைத் தோற்றத்துள்ளும் ஒக்க மதிக்கப்படும். ஆகையால், நண்பர்கள் "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்ற வகையிற் சென்று நலம் எய்துவாராக!

இனி, சிவனெறியின் முறையைச் சிறிதுகாண்பாம்! "பாயுடையார் விடுத்த பழியழல்வழுதி யுடல் குளிப்பப் பதிகமோதும் - சேயுடை யாரணைந்திலைக்கும் செவியுடையார் அளவிறந்த திசைகள் எட்டும் - தோயுடையார் பொன்னிதழித் தொடையுடையார் விடவரவம் சுற்றுமால - வாயுடையார் புகழ்பாடப் பெறுவேமேல் வேண்டுவது இம்மனித யாக்கை" எனவரும் இப்பாட்டினால், பிறப்பின் மேன்மையும், செய்கையும், பெறும் பயனும் விளங்கி நிற்றல் அறிக. "அவனவள் அது எனும் அவைகளில் ஒருபொருளிவன்" என வரும் மதுரைக் கலம்பகத்துத் தாழிசையொன்றால், சிறப்பை நோக்காது பொதுவை நோக்கும் இடத்து எல்லாவுயிருமாகி நின்றான் சிவபெருமானே என்பது நமக்கு விளக்கமாம். எல்லாம் சிவமாகி நிற்றலால்தான், சிவபெருமானைத் தொழுதெழுவார், சைவசமயத்தினர் என்று கூறப்படுவர். "சைவத்தின்மேற் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம் - தெய்வத்தின் மேற்றெய்வம் வேறில்லை" எனவரும், சைவ எல்லப்ப நாவலர் திருவாக்கும் "சைவசமயமே சமயம்" என்பதால் உணர்த்தும் தாயுமான புனிதரது திருவாக்கும் ஈங்கு வலியுறுத்தும். அத்தகைய, சைவ மரபில் தோன்றியவர்கள் மும்மையில் நற்றவம் புரிந்தவர்களே யன்றி, மற்றையரிலர் என்பது கீழ்வரும் ஓர் பாவின் மூலம் நமக்குத் தெளிவாம். "எண்ணிய கருமம் முடியினும் முடியா தொழியினு மீசனைத் தொழுதல் - புண்ணியம்" என்று கூறினவரான வீரவைஷ்ணவ வில்லிபுத்தூராழ்வாருக்கு எம்மால் செலுத்தப்படும் நன்றி எத்

க்கையது என்று கலங்குகிறேன். ஆனால், எனது பூர்ணமான அன்பைச் செலுத்துகிறேன். ஏனென்றால்? வழியறியாத ஒருவனுக்கு ஒரு ஊன்றுகோல் உளதாயின் அது எத்தகைய நன்மையைத் தருமோ, அதுபோல எனக்கு, பிற நூலின் உதாரணம் கிடைக்கப்பெறச் செய்தது, அவ்வாழ்வாருடைய நடுநிலையும் தூய்மைக் குணமுமே அன்றி வேறில்லை என்பதேயாம். வீரவைஷ்ணவப் பெரியாரால் போற்றும் பெருமை வாய்ந்த இச்சைவ சமயத்தில் தோன்றிய நாம் புலாலுண்ணலை மறுத்து புனித நிலையை உடையராதல் வேண்டும். வைஷ்ணவர்களில், சிலர் சைவர் என்று சொல்லுகின்றனர். அவர்கள் சைவக்குறியாகிய திருநீற்றைத் தரிக்கின்றனரில்லை; திருமண் இடுகின்றனர். அத்தகையர் மாமிசம் உண்ணாதிருத்தலால் சைவர் என்று சொல்லிக் கொள்ளுகின்றனர். இம்மொழியின் பொருளினால் சைவம் என்பது எத்தகைய நிலையில் உள்ளது என்பதைக் கவனியுங்கள்.

இத்தகைய மேன்மையுற்ற சிவசமயத்தில் தோன்றிய மக்கள் கொல்லாதும், புலாலுண்ணாதும் இருத்தல் வேண்டும். பல்லோர் புலாலுண்ணுகின்றார்கள். அவர்களை எவ்வாறு சைவர் எனப் பகருதல் கூடும்? அவரைச் சைவர் என்றலும் பொருந்தாது. சைவர் என்றால், மாமிசம் உண்ணாது விபூதிதரித்தவர்களைத் தான் மற்றோரையன்று. சமயத்திற் சிறந்தது சைவ சமயம்; என்பதற்குத் தாயுமானவர் திருவாக்கு ஒன்றே வெளிப்படுத்தும். "சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்-கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்-பொய்வந்துழலும் சமய நெறி புகுத வேண்டா முத்திதரும்-தெய்வ சபையைக்காண்பதற்குச்சேரவாரும் செகத்தீரே" என்பது. ஆகையால் புலால் உண்ணல்சிவத்தைக்கடவுளாகக் கொண்ட நம் சமயத்தினருக்குத் தக்கதன்று. சைவக் கடவுளுக்கு முக்கண்ணுண்டு. மற்றைக் கடவுள் எனப்படுவோருக்கு இவ்வுயர்வு இல்லை. தலைவர் எனப்படுவோருக்கு எல்லோரையும் விட உயர்வு ஒன்றிருக்கவேண்டும். அவ்வுயர்வு இச்சமயத் தலைவருக்கே ஆம். இத்தகைய, கடவுளைத் தொழப்பெற்ற நாம், தீயன ஒரீஇ, நல்லன நிறீஇ பசுபதியாகிய பொருளுக்குப் பாத்திரராகி இனிது வாழ்வோமாக! இந்நெறி நிற்றலே சிவநெறி எனப்படும் என்பதறிக!

கம்பராமாயணத்தே ஒரு பாவின் திருத்த மறுப்பு.

(குற்றலம் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிப்பண்டிதர், திருவாளர், ப. சிங்காரவேல் பிள்ளை அவர்கள்.)

நீரிடை யுறங்கும் சங்கம் நிழலிடை யுறங்கும் மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கும் ஆமை துறையிடை யுறங்கும் இப்பி
போரிடை யுறங்கும் அன்னம் பொழிலிடை யுறங்கும் மேகம்.

இச்செய்யுளுக்கு நண்பர் சீனிவாச முதலியார் அவர்கள் கண்டதோர் திருத்தம் பொருத்த மன்றென்பதும், அது ஆசிரியர் கருத்தன்று என்பதும், நன்கு விளக்குவாம்.

ஆசிரியர், இடம் விட்டுப் பெயரும் பொருளாகிய இயங்கியற் பொருளெனப்படும் சங்கு, மேதி, வண்டு, திருமகள், ஆமை, இப்பி, அன்னம், மயில் இப்பொருள்களெல்லாம் மருத நிலத்தின் நலன் நோக்கி அதைவிட்டுப் பெயரா என்று மருத நிலத்தின் சிறப்புக் கூறினரன்றி நீரினைச் சிறப்பித்துக் கூறினரன்றென்பது நன்கு தெளிக.

அப்பொருள்களுள் செய்யாள் என்பாள், ''சகடக்கால் போல வரும் செல்வம்'' என்பதனானும், ''அறனறிந்து வெஃகா அறிவினர்ச் சேருமே - திறனறிந் தாங்கே திரு'' என்பதனானும், ஓரிடம் நிற்றல் இயல்பன்றாகலின் அத்திருவை அவ்வியல்புடைய பொருள்களுள் ஒன்றாக வைத்து எண்ணினர் என்க. எண்ணவே அவை அயோத்தி நாட்டு மருத நிலத்தின் அவ்வப் பகுதியின் நலஃ நோக்கிப் பிறஇடத்திற்குச் செல்லும் நினைவின்றிக்குறிப்பிட்ட அவ்வப் பகுதியில் உறங்கின என்பார். உறங்குமெனச் செய்யுமென்னும் முற்றாகக் கூறினர். ''திருவளர் தாமரை'' எனப் பிறண்டு வருதலும் இப்பொருட்டாதல் காண்க. இதுவே ஆசிரியர் கருத்தாகும் என்பது உணர்க.

இதற்குப் பேருரை எழுதப்புகின் பெருகுமாதலின் எழுதாது விடுத்தனம். இக்கருத்தறியாது பிழையைத் திருத்த மென்றெண்ணிக்கொண்டு 'செய்யாள்' என்பதைச் 'செய்யுள்' எனவும், நினைவுடையதல்லாத தாமரையை நினைவுடையதாகக் கொண்டு தாமரை உறங்கும் எனவும், கூறுவது பெரிதும் மரபு பிழையாகு மென்க இது நாற்கலைக் கேட்கு முறையாற் கேட்டுணரும் புலவர்களுக்குத் தெள்ளிதின் உணரப்படும் என்பது ஒன்றும். இப்பிழைபாடு கொண்டு நண்பர் முதலியார் அவர்கள் எடுத்துக் காட்டும் செய்யுட்களும், உரை நடையும் ''வெற்றெனத் தொடுத்தல்'' ''நின்று பயனின்னம்'' என்னும் குற்றங்களுக்கியையு மாதலின் விரித்திலாது விடுத்தனம்.

இரணியூர் கோவில் சாஸனம்.

ஸ்வஸ்திஸ்ரீ (11..) சகாத்தம் ௲௪௱௨௰௩ (இங்கிலீஷ் 1501 ஜனவரிமீ") மேல்ச் செல்லாநின்ற இரௌத்திரிவரு தைமீ" உ௨ கல்வாய்நாட்டு இளையாத்தன்குடியான குலசேகர புரத்து திருவேட்பூருடையாற்கு இன்னாட்டு இரணியூராக அமைந்த ஊரவரோம் எங்களூர் வடக்கு வாசலில் நல்லதண்ணீர் ஊரணி திருவேட்பூருடையானும் இதன் தெற்கு வடபாலுகந்த பத்திரகாளியம்மை கோவிலும் மூலவேதகமும் முன்னாள் திருவேட்பூருடையார்கள் தன்மமாகையால் இற்றைநாள் சொக்கனான நியாயபரிபாலரும் இன்பவனப் பெருமாளான வடிவதரையரும் இவர் தம்பி ஆளுடையாரும் அளகக்கோனார் மெய்யரான அமையபரிபாலரும் ஆக இவர்கள் உடன் பாதியும் சூரியதேவரான சமயபரிபாலரும் திருநெல்வேலி உடையாரான இசையராயரும் ஆளுடையாரான கனகபரிபாலரும் இவர்கள்உடன் பாதியாராகவும் எழுந்தருளுகிற பிடாரியாரும் அத்திரதேவரும் இவைகள் தன்மம் இத்தேவிக்குதேவிதானமாக இரணியூர் வயலில் வளத்துவாச்சான்தடி இரண்டு நிலம் இரண்டும் தியாகவல்லிவயலில் ஆலஞ்செய்நிலப் -ஒருமாவரையும் செங்கழுநீர் புன்செயும் ஊர்வகையில் விலைகொண்டு இத்தேவிக்கு கல்வெட்டிக்கொடுத்தோம் தன்மகத்தாவுக்கு இவ்வூரில் மேலைத்தெருவில் ஆறுமனையும் திங்கள் திவசம் திருநாளுக்கு பரிவட்டமும் கட்டி அருளிப்பாடும் பெற்றுப் போதுவாராகவும். (மனை ஆறு.)

இப்படிக்கிப் பிரமாணம் பண்ணிக்கொடுத்தோம் சூரியதேவனை சொன்னவண்ணம் செய்தார் உள்ளிட்டார்க்கும் சொக்கனான நியாயபரிபாலருக்கும் இரணியூர்க்குச் சமைந்த ஊரோம் இப்படிக்கு பெற்றூரான திருக்கோளக்குடி ஆண்டாரான மாகாணியற்கும் ஒரு கூறும் மெய்யரான அமையபரிபாலா.........க்கும் பெரிய பெருமாளுக்கும் ஒரு கூறும் இன்பவனப் பெருமாளான வடிவதரையருக்கு ஒரு கூறும். இதில் இவர் தம்பி ஆளுடையாருக்கும் குடுத்தோம் தொண்டைமான் எழுத்து

இப்படிக்கி பெரியவனை முனையத்தரையன் எழுத்து இப்படிக்கி மெய்யரான முத்தரையன் யெழுத்து

இப்படிக்கி உ●தயபெருமாள் முன்சோழியத்தரையன் எழுத்து.

இப்படிக்கி பெரிய பெருமாளான மீனத்தரையர் எழுத்து

அருணகிரிநாதர் குலத்தின் ஆராய்ச்சிவிகற்பநிவிர்த்தி.

(திருநெல்வேலி, திரு, மாணிக்கவாசகம் அவர்கள்.)

வெண்பா.

மெய்கலவாப் பொய்யையெலாம் வேண்டியுழைக்கும் புவியோர்
பொய்கலவா மெய்யைப் புறத்தொதுக்கல்—மைகலவா
வேற்குமரன் றன்செயலோ வெய்யவினை யின்றிறமோ
ஏற்குமறி வோருணர்வா ரே.

யுவஹு மாசித் திங்களில் வெளியான சிவநேசன் பத்திரிகையின், 173-வது பக்கத்தில், "அருணகிரிநாதர் குலத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள்" என்ற தலைப்பின்கீழ், சைவ சித்தாந்த சமாஜக் காரியதரிசி, திரு, ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களால் எழுதப்பட்டவற்றின் ஒரு பகுதி, 'ஒரு தமிழன்' வரைந்திருப்பதைக் கண்டு வியப்பும் சலிப்பும் கொள்ள நேர்ந்தது. அதுகீழ்வருமாறு:—

(1) அகத்திய முனிவரால் வளர்க்கப்பட்ட நாயின் தொடர்பில் ஏழாவது பிறவியாக ஸ்ரீ அருணகிரிநாதர் அவதரித்தனர் என்றும், அது முருகவேள் தமக்கு அறிவில் உணர்த்திய உண்மையென்றும், வண்ணச்சரபம் ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள் ஷை புராணத்திற் கூறியதில் நமதுமுதலியாரவர்களுக்கும் அதிக ஆக்ஷேபம் இருப்பதாகத் தெரியவில்லை; ஆதலின் அதனைப் பொதுவாக விட்டனர் போலும்.

"எண்ணில்பல கோடி தொண்டர் முருகவேளை
யிறைஞ்சிநிற்க அருணகிரி யென்னு நற்பேர்த்
திண்ணியன்றான் இத்தனைபே றடைந்த ஞாயம்
திகழும் வண்ணம் அவனுயிரிற் சேர்ந்தபூர்வ
புண்ணியத்திற் சிறிதறிந்த மட்டும் சொன்னேன்
புறக்கருவி உட்கருவிப் பொருத்தம் யாவும்
நண்ணியசைப் பவனுணர்த்தா விதத்தைக் கேட்டால்
நானறியேன் என்பதற்கும் நாணிடேனே"

(அருணகிரிநாதர் புராணம்)

(2) பட்டினத்தடிகள் திருவருணைக் தலத்தின் வீதியில் முத்தம்மை யென்னும் கணிகையைக் கண்டு நெருங்கிக் கையைப் பற்றின ரென்று ஷெ புராணம் திருவவதாரச் சருக்கத்தில் கீழ்க் கண்ட கவிகளால் தொடர்பாகக் கூறுகின்றது.

"சென்றனன் விரைந்து சேர்ந்தனன் தெருவில் சிறுவர்தாம் பற்பலர் சேர்ந்து, பின்றனைத் தொடரத்திரிந்தன னொருநாள் பிர மையைப் பெருக்கிய பேதை, குன்றவில் லுடையார் கோயிலைநாடிக் குலமயிலென வரக்கண்டான், முன்றவம் காட்டிக் கொடுத்ததென் றடுத்தான்" என்ற தொடர்பாம்.

(3) கோயிலை நாடி வீதியில் வந்த முத்தம்மையாரை அடிகள் கண்டனர், அடுத்தனர், என்றுகின்றது. கவிப்பொருள் இவ்வா றிருப்ப முதலியாரவர்கள், "தூய்மை மிக்க சிவாலயத்தில் ஒரு கணிகையைக் கலவிக் கழைத்து" என மயங்கியெழுத நேர்ந்தவினை என்னென்பது? அவள் இணங்காமை கண்டுவிட்டபின், தானே வெளிப்பட்ட சுக்கிலத்தைக் கையிலேந்தி அடிகள் இலையில் வைத் தன ரென்றதில், அடிகளது விந்துவானது கையிலேந்திக் கல்லையில் வைக்குந் தகுதியினதாய், யோக சாதனத்தால் மணி போலத் திரண்டிருந்த தென்பதும், முடிவிற் சிவலிங்க வடிவாதற் குரிய அடிகளது திருமேனியில் அமைந்த அவ்விந்து அருட்சத்தியியக்கத் தால் தூலக் கலப்பின்றி வெளிவந்ததென்பதும், ஆதலால்தான் பூத வெளிக் கலப்பாற் கெடாமல் தனது ஆகர்ஷண சத்தியோடிருந்து, அம்மகளால் பின் உண்ணப்பட்ட போதும் இயற்கை முறைப்படி இரைப்பையிற் சேர்ந்து சீரணப்படாமல் நேரே கருப்பாசயத்திற் சேர்ந்து வளர்ந்ததென்பதும், "செயற்கரிய செய்வார் பெரியார்" என்ற பொய்யா மொழிக்கு இஃது தக்கதோர் சான்றென்பதும் நமது முதலியாரவர்களின் ஆராய்ச்சியில் விளங்கா தொழிந்தது பரி தாபமாகும்.

(4) சைவசித்தாந்த அநுட்டானங்களாகிய தியான நிட்டை சமாதிகளிற் பயின்று அநுபவிப்போர்க்கே அவ்வுண்மைகள் அறிதற்பாலனவாகும், பொருள் விவகாரக் காரியத்திற் பழகிவரும் நமது நண்பருக்கு இனியெதிர் காலத்தில் திருவருள் காட்டினுற் காணல் கூடும். "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே". என்ற வேதவாக்கு இங்கு கருதத் தக்கதாம்.

(5) ஆலயத்தில் கணிகையை விரும்பியழைத்தல், சுக்கிலத்தைக் கல்லையில் வைத்தல் என்னும் குற்றங்கொண்ட ஒரு துறவியைச் சீலமுள்ளவரெனக் கருதாமை போன்றே உருத்திர கணிகையர் வகுப்பிற் பிறந்து தமது குலவொழுக்கத்தில் அமைந்து சிவாலயத்தொண்டும் இயற்றியிருந்த ஒரு அம்மையாரையும் சீலமுள்ளவரென எவரும் மதியாரென்று ஒரேபடியால் அளந்த முதலியாரவர்களின் சமரசநிலை மேலானதே. கணிகையர் மரபிற் பிறந்தது கொண்டே சீலமின்மை கற்பிப்பதாயின், இதற்குமுன் இருந்த, கண்டகை, பொன்னனையாள், முதலானஉத்தமப்பெண்மணிகளின் சீலம் என் ஆவதென்று ஆராய்தல் கடமையாம்.

(6) திருப்புகழ்ப் பாக்களின்கண் அருணகிரியார் தமது குலத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளதாகக் குறிக்கப்படும் கவிகளுக்கு தலைப்புக்குறி விளக்காமல் எண்வரிசை காட்டியமுதலியாரவர்களின் கொள்கை சில பழய பதிப்பில் காணப் பெறவில்லை. ஒரு வேளை தயது அடக்கவிலைப் பதிப்புக்கு வேறு வரிசை அமைத்திருப்பின் அவ்விவரம் விளக்கியிருப்பின் மயங்க நேராமலிருக்கும். சுவாமிகளை ஒருவாறு சைவவேளாளரே யென்று உறுதி கூறாமல் "இருந்திருத்தல் கூடும்" என்று முதலியார் அவர் கூறிய கொள்கையையும் தாண்டி, "அது ஒரு சிறிதும் பொருந்தாது" எனக் கண்டித்துக் கூறினன் தமிழன்.

(7) திரு, காஞ்சி, நாகலிங்க முனிவர் பதிப்புக்கு திரு, கா. நமச்சிவாய முதலியாரவர்கள் தாம் எழுதிய முன்னுரையிலும் அருணகிரிநாதரை, காஞ்சி மூதண்ட முதலியார் முத்தம்மை என்னும் தம்பதிகளுக்குப் பிறந்த "குமாரரெனவும் சிலர் கூறுவர்" எனப் புடைகூறிச் சென்றானன்றி அதனில் நிலைத்து நின்றாரல்லர். "எஃது எப்படியாயினும் அவர் ஒரு பழந்தமிழ்க்குலத்தின ரென்பது திண்ணம்" என்று முடிவு காட்டி நழுவினர். தமிழ்க் குலம், அதனினும் பழந்தமிழ்க் குலம் என்றொரு குலம் இதுகாறும் கேட்டதில்லை. எனவே புதுத்தமிழ்க்குலம் வேறும் உண்டோ என்ற ஐயமும் விளையக்கூடும். 'தமிழ் பேசுங் குலத்தினர்' என்பது பொருளாயின் விகற்பம் அதிகமின்றாம்.

(8) அருணகிரிநாதாது புராணத்தை இயற்றத்துவக்கிய ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள், பாயிரத்தில் அவர் துதியில், "உன்

சரிதந்தனைப்பலவா றுலகத்தார் பகர்வது கேட்டுளம் பொறுமல், முன் சரிதந்தனைக் கூட்டிச் சொலப்புகுந்தேன்" என்றும் இனி வாழ்க்கைச் சருக்கத்தில் "யானிதிற் பகர்ந்த வாற்றிற் கிசைந்திடா விதமுஞ் சில்லோர், நானிலத்துரைப்பதுண்டு" என்றும், நூல்முடிவில், "பத்தியினுலிச்சிறியேன் பாடுமிந்தக் காவியத்தைச், சத்தியமாச் செவ்வேள் சரியென்றான் - புத்தியுளீர், ஐயமுறவேண்டாம் அருணகிரிநாதனன்பால், மெய்யடியராகி மகிழ்வீர்" என்றும் கூறுவதால் தற்போத முனைப்பின்றித் தெய்வத்திருவருளைத் துணைக் கொண்டு கூறியுள்ளாரென்று நன்கு தெரிகிறது.

(9) "தோடவிழும்பூங் கோதை" என்ற துவக்கமுள்ள வெண்பாவும் உலக பரம்பரையான வழக்கக் கதைகளும், அருளியற்கை அளவுபடாதென்னும் நம்பிக்கையும் கொண்டே, சுவாமிகள் புராணத்தையியற்றின ரென்பதொருதலை. அங்ஙனமிருக்க அவ்வரலாற்றைப் பற்றி, "உண்மை ஒரு சிறிதும் கலவாத முழுப்பொய் என்பதில் யாதொரு ஐயமில்லை" என நீட்டி வரைந்தது மிகவும் கொடிதென்னலாம்.

(10) தன் குலம் உயர்வென்று வாய்ப்பறை சாற்றித்திரியும் தேகாபிமான மயக்க நிலையை அருளநுபூதிச் செல்வராகிய அருணகிரிநாதருக் கேற்றியும், அவரது ஏகதேச பாடல்களுக்கு வலிந்து பொருள் கூறியும் தர்க்கித்தல் பயனில் செயலாகும். பெண்கொள்ளல் கொடுத்தலாதிய இலௌகீக விவகார நிகழ்ச்சிப் பொருட்டு வகுக்கப்பட்டுள்ள ஜாதிவரம்பின் பிரஸ்தாபம் பேரின்ப அநுபவ விஷயத்தில் முயல்வோர்க்கு வேண்டியதில்லை.

(11) எனவே, இதுவரை கூறி வந்த ஞாயத்தால், பட்டினத்தடிகள் யோக வலிமையாற் சில நூற்றாண்டுகள்வரை உலகில் உடலோடிருந்திருத்தல் கூடுமென்றும், முத்தம்மையைக் கண்டு மோகித்தது சிவபிரானருள் அசைப்பே யன்றி அவரது புலச்சேட்டைச் செயலன்றென்றும், அருணகிரியார், தமது தாயின் கருப்பாசய சம்பந்தத்தாற் சிலகாலம் மாயைச் செயலிலுழன்று பின் பிதாவின் அமிசமானவைராக நிட்டாபரராய் ஞானநுபவம் பெற்று விளங்கின ரென்றும் கொண்டு சமாதான குணத்துடன் வணங்கி வழிபட்டுப் பயன்பெறுவதே சான்றோர் கடமை யென்பது எனது அபிப்பிராயம். அறிவுலகம் இதனை ஏற்றருளுமாறு வேண்டுகிறேன்.

———

வேதாகம உண்மை.

(கோவிற்பட்டி, தமிழ்ப்பிரமசூத்திராசிரியராகிய,
உயர்திரு, சுவாமி, விருதை, சிவஞானயோகிகள்) •

உலகில் உயிர்கள் அறம்மறங்களை ஆராய்ந்து நன்னெறியி லொழுகிப் பெரும்பொருளின் அருளாற் பேரின்பமடைதற்கு முதற்கருவியாயுள்ளன வேதம் சிவாகமம் என்ற முதனூல்கள். வேதங்கள் அவற்றிற் குறிக்கப்பட்டபடியே பல இருடிகளாலும் பெண்புதர்களாலும் பல காலத்தி லியற்றப்பட்டன. அவை அன்னவராலியற்றப்பட்டானும் அவர் பரம்பொருளை யிடைவிடா தெண்ணி யொன்றுய்க் கலந்தின்பந்தினைக்கும் துகர்ச்சியுடைய மகிழ்ச்சியராதலால் அன்னவருரைகள் பிஞ்ஞுக னுரையாகவே போற்றப்பட்டன. அவைகள் கன்மகாண்டம் ஞானகாண்டமென விரு பகுப்புகளுடையன. கன்ம காண்டம் வேதம், ஞான காண்டம் உபநிடதமென்னப்படுகின்றன. சிவாகமங்கள் சிவர், உருத்திரர்கள் வாயிலாய் வெளிப்போந்தன. சிவர் உருத்திரர்கள் பரமசிவ மூர்த்தங்களேயாதலால் அவை பிஞ்ஞுகன் முகங்களினின்று வந்த தாய்க் கூறப்பட்டன. சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானமென் னும்பகுதியினைபுபெற்றஞானநெறிகளையேகூறுகின்றன. இந்நெறிகளோடுட னிகழ்ச்சியுடைய தீக்கைகளில் முதலாவதான சமயதீக்கை முதல் சிவோகம்பாவனை யுண்மையால் சரியை முதல் நான்கும் ஞான நெறிகளென்னப்பட்டன.

உபநிடதங்களும் ஞானோபாசனைகளையே கூறுகின்றன. வேதத்தின் கரும காண்டங்களில் வேள்விச்செயல்களே மிகுத்துக் கூறப்பட்டுள்ளன. ''துறக்கம் வேட்டோன் சோதிட்டோமத்தால் வேட்க'' என்பதுமுதலிய சுருதிகளால் வேள்விச்செயல்கள் துறக்க முதலிய போகலோகப் பயனைப் பயப்பனவே யாதலால் அவற்றைக் கூறும் வேதங்கள் அபரவித்தையெனவும், ஞானோபாசனை கூறும் உபநிடதங்கள் பரவித்தை யெனவும்படும். அக்கருத்தை,

முண்டகோபநிடதம் 1—5.

''தத்ரா அபரா ருக்வேதோ யஜுர்வேதஸ் ஸாமவேதோ அதர்வவேதஸ்ஸிக்ஷா கல்போவ்யாகரணம் நிருக்தம் சந்தோஜ்யோ திஷமிதி, அதபராயயாத தக்ஷரமதிகம்யதே.''

[இ - ள்.] அவ்வித்தைகளுள் அபரவித்தைகள் ருக்வேதம் யஜுர்வேதம் சாமவேதம் அதர்வவேதம் சிக்ஷை கல்பம் வியாகரணம் நிருக்தம் சந்தசு ஜோதிடம் என்பன. எதனுல் அந்த அக்ஷர மாகிய பிரமம் அறியப்படுகின்றதோ அது பரவித்தை.

என்று விளக்குகின்றது முண்டகசுருதி. எதனால் பிரமம் அறியப்படுகின்றதோ அது பராவித்தை யென்று பொதுப்படக் கூறலால் ஞானோபாசனைகளையேகூறும் சிவாகமங்களும் அதனாற் குறிக்கப்பட்ட பராவித்தையேயாம்.

காமிகாகமத்துவக்கத்தில்,

"பத்யர்த்த தர்சகம் ஞாநம் காமிகாதி பரம்பவேது வேதாத்யம் அபரம் ஞானம் பசு பாசார்த்த தர்சகம்"

[இ - ள்.] பதிப்பொருளை உணர்த்துகின்ற காமிக முதலியன பராவித்தையாம். பசு பாசங்களை யுணர்த்துகின்ற வேத முதலியன அபரவித்தை" என்று, வேதாதிகள் அபரவித்தை சிவாகமங்கள் பராவித்தை யென்று கூறலுமிதை நிலையுறுத்தும்.

வேதோபப் பிருமிமணமாகிய சிவபுராணம் வாயுசங்கிதை, உத்தரபாகம் அத். 12 சுலோகம் 21ல்,

"சர்வக்ஞக பரிபூர்ணஸ்ச சிவோக்ஞேயஸ் ஸிவாகமே".

[இ - ள்.] முற்றறிஞனும் எங்கும் நிறைந்தவனும் ஆகிய சிவன் சிவாகமத்தில் அறியற்பாலன்.

வாயு சங்கிதை உத்தரபாகம் அத் 8 சுலோ 38ல்,

"ஸிவாகமோக்தம் யத்ஞாநந்த த்த்ஞாநமுச்யதே"

[இ - ள்.] சிவாகமத்தில் எந்த ஞானம் கூறப்பட்டதோ அது இவண் ஞானம் எனக் கூறப்படுகின்றது. என்று,

சிவாகமத்தில் சிவபிரானைத் தெளிவுபெற அறியலாமென்றும், அதிற் கூறப்படும் ஞானமே பராவித்தையாகிய ஞானமென்றும், வியாசபகவான் கூறிய சொற்றொடர்களுமிதை வற்புறுத்தும்.

இனி வேதத்தின் கன்ம காண்டத்திற் கூறப்படும் வேள்விகளில் இந்திரன் அக்கினி அக்கினிஷோமீயர் விண்டு முதலிய பல தெய்வங்களைப்பற்றி வேட்டல் கூறப்படினும் அவ்வெல்லா வேள்விகளினும் முடிவில் அவற்றின் பலனையடையச் செய்யப்படுவது சுவிஷ்டகிருத் ஓமம், அந்தச் சுவிஷ்டகிருத் என்ற தெய்வம்,

யஜுர், சா. 3—4,

"ருத்ரோக்நி ஸ்விஷ்டகிருத்"

[இ - ள்.] "உருத்திரனே சுவிஷ்டகிருத் என்னும் அக்கி' என்ற உரையால் பரமசிவமென்பது தெளிவு.

"காதபதிம் மேதபதிம் ருத்ரம் ஜலாஷபேஷஜம்".

[இ - ள்.] "வேதத்தாற்பாடப்படும் தலைவனும், வேள்விக்குத் தலைவனும் பிறப்பிறப்புப்பிணிகளுக்கு மருந்தும்ஆகிய உருத்திரனை"

சாமவேதம் ஆக்நேயம் கண்டம் 6. சாமம்.

"ஆவோராஜாநம் அத்வரஸ்ய ருத்ரம்"

[இ - ள்.] "வேள்விக்கு அரசனாகிய உருத்திரனை எண்ணுவோமாக"

முதலிய எஜுர் வேத சாமவேத உரைகள் பரசிவமே வேள்விகளுக்கு இறைவனும் பயன்தருபவனும் பிறவிப்பிணி போக்கி வீடு தரும் பெரும் பொருளும் என்று விளக்குகின்றன.

இனி வணக்கத்துக்குரிய பரம்பொருள் சிவன் என்பதை யஜுர் வேதத்தில் "யஸ்மை நமஸ்தஸ்சிரோ" "எவனுக்கு வந்தனமோ அவன் தலை" என்று துவக்கி பூதநாதனாகிய பரம் பொருளை முதலைவடிவாக எண்ணித்தருமம் பிரமன் விண்டு இந்திரன் முதலிய வர்களை அதன் அங்கப் பிரத்தியங்களாகக் கூறி அதன் தலையும் அங்கியுமாகிய,

"த்வம் பூதாநாமதிபதிரஸி த்வம் பூதாநாம் ஸ்ரேஷ்டோஸி நமோநமஸ் ஸர்வம்தேநமக"

"நீ பூதங்களுக்குத் தலைவனாயிருக்கின்றாய்; நீ உயிர்களுக்கு இறைவனாயிருக்கின்றாய்"

வணக்கம் வணக்கம் எல்லாவணக்கமும் உனக்கு, என்று எல்லாத் தெய்வங்களையும் அங்கங்களாகவும் சிவபிரானை அங்கியாகவும் எல்லாவணக்கமும் சர்வாந்தரியாமியாகிய அவனுக்கே உரியது என்று விளக்கிக் கூறுகின்றது. இவற்றால் வேதங்களனைத்தும் சிவபிரானையே பரம்பொருளாய்த் துணிகின்றன வென்பது ஒருதலை.

இனி வேதத்தின் ஞானகாண்டமாகிய உபநிடதங்களின் துணிபொருள் யாதெனில்,

முப்புரங்களைச் சிவபரப்பிரமம்வெல்ல அவண்பரிசனயாயிருந்த தேவர்கள் தாந்தாம் வென்றதாய் நினைந்து பெருமை பாராட்டினர். அன்னவர் தருக்கொழிக்கப் பிரமம் இயக்கன் வடிவாய்த் தேவர் முன்தோன்றினன். அப்பொழுது தீ கால் இருவரும் அவனை யறிய முயன்று மறியமாட்டாமற் றருக்கொழிந்து திரும்பினர். இந்திரன் முயன்றபோது சிவபரப்பிரம்மமாகிய இயக்கன் மறைந்தனன். அப்பொழுது தோன்றினள்.

கேநோபநிடதம் 3-12.

"உமாம் ஹைமவதீம்தாம் ஹோவாசகி மெதத்யக்ஷமிதி"

[இ - ள்.] இமயமலைமகளாகிய உமையை (இந்திரன்) அந்த இயக்கன் யார் என்று கேட்டனன்.

கேநோபநிடதம் 4—1.

"ஸாப்ரஹ்மேதி ஹோவாச"

[இ - ள்.] "அவள் (பார்வதி) பிரமம் என்று சொன்னாள்" என்று சிவபிரானைச் சர்வாந்தரியாமியாகிய பிரமமென்று வற்புறுத்துகின்றது.

சுவேதாசுவ்தரம் 4—18.

யதா தமஸ்தந்த்திவா நராத்ரிர்நந்தசாஸசிவ ஏசவகேவலக ததக்ஷரம் தத்ஸவிதுர் வரேண்யம்"

"எப்பொழுது சங்காரகாலமாகிய இருட்டோ அப்பொழுது பகலில்லை இரவில்லை சத்தில்லை அசத்தில்லை சிவனே தனித்துளான். அவன் அக்ஷரன் அவன் கதிரவனுக்குப் பரம்பொருள்"

என்று சர்வ சங்கார கால காலத்துள்ளவன் சிவனொருவனே யென்றும் அவனே காயத்திரிக்குப் பொருளாவானென்றும்.

சுவேதாசுவதரம் 6—2.

"யதாசர்ம வதாகாசம் வேஷ்டயிஷ்யந்தி மாநவாக, ததாசிவ விக்ஞாயதுகு பள்யந்தோ பவிஷ்யதி"

[இ - ள்.] எப்பொழுது மக்கள் விண்ணைத் தோலைப்போலச் சுருட்டுவார்களோ அப்பொழுது சிவத்தையறியாமல் துன்ப நீக்க மடைவார்கள்;

என்று சிவபிரானையன்றி வீடுபேறடைதல் கூடாமையென்றும்,

சுவேதா 3—11.

"ஸர்வாநநசிரோக்ரீவஸ் ஸர்வபூத குஹா ஸயக | ஸர்வவ்யாபீச பகவாநஸ் தஸ்மாத்ஸர்வ கதஸ்ஸிவக | | "

[இ - ள்.] எங்கும் முகத்தையும் தலையையும் உடையவன் எல்லா உயிர்களின் உள்ளத்தும் உள்ளவன்; எல்லாவற்றிலும் நிறைந்தவன் பகவன், ஆதலால் எங்கும் உளன் சிவன்.

என்று சிவபிரான் எல்லாந்தன் வடிவாயுடைய அட்டமூர்த்தனும், சர்வாந்தரியாமியும், எங்கும் நிறைந்தவனும் ஆம் என்றும்,

அதர்வசிகை

"சிவ ஏகோத்யேயஸ் ஸிவம் கரஸ்ஸர்வ மந்யத்பரித்யஜ்ய"

[இ - ள்.] பிறதெய்வங்களனைத்தையும் விடுத்து மங்களத்தைச் செய்கின்ற சிவனொருவனே தியானிக்கத் தக்கவன் என்றும்,

(வரும்)

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தருணாலய கும்பாபிடேக வித்யாலயத் தாபன

மணிவாசக சங்கத்

திருவிழாப் பத்திரிகை.

திருச்சிற்றம்பலம்.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கு
மாதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

ஊறினா ரோசையுள் ளொன்றினா ரொன்றிமால்
கூறினா ரமர்தருங் குமரவே டாதையூர்
ஆறினார் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

திருச்சிற்றம்பலம்.

"செஞ்சடை வெண்மதி யணிந்த சிவனெந்தை திருவருளால்" செந்நெல்வளமிக்கோங்கிச் செழிப்புற்றுமிளிரும் சோழநன்னாட்டில் ஏழ்தலம்புகழும் காவிரியாற்றின் தென்பால் திருஞானசம்பந்தப் பெருமானாருளியதேவாரத்திருப்பதிகம்பெற்றுசிவராஜதானியாகச் சிறப்புற்றுத்திகழும் திருத்தேன்குடி த்திட்டை திருத்தல சிவாலயத் தின்கண் அநவரத சாநித்தியமாய் விளங்கும் ஸ்ரீ உலகநாயகி சமேத ஸ்ரீ பசுபதிநாதர், குஞ்சரமுகன், குமரவேள்,சண்டேசராதிய மூர்த்தி களுக்கும்,பரிவாரதெய்வங்களுக்கும் தாதுவருடம்சித்திரைமீ கசஉ

(26—4—1936) பானுவாரம்; சுக்கில சஷ்டி; திருவாதிரை; சித்தயோகம்கூடும்நன்னாள் உதயாதி க௦வ-க்குமேல் ககவ-நாழிகைக்குள் நல்வேளையுடன் கூடிய மிதுனலக்ன நன்முகூர்த்தத்தில் தருணாலய திரிபந்தன கும்பாபிடேகமும், கஅஇ-க்குமேல் உகவ-நாழிகைக்குள் நல்வேளையுடன் கூடிய சிம்மலக்ன நன்முகூர்த்தத்தில், உயர்திரு, பஞ்சாக்ஷரபுரம் வாலையானந்த சுவாமிகளென்ற சச்சிதானந்த சுவாமியவர்களை சைவ சித்தாந்த சாஸ்திரோபதேச குருமூர்த்தியாகக்கொண்டு சித்தாந்த வித்தியாசாலைத் தாபனமும், பிற்பகல் அவர்கள் மாபெருந் தலைவராக வீற்றிருக்க, புலவர் பெருமக்களின் அரிய விரிவுரைகளுடன், பலவான்குடியில் குமார விநாயகர் திருக்கோயில் மகா கும்பாபிடேகமும் திருவாசகபாடசாலைத் தாபனமுமான சாதாரண ஆவணி கூவ (18—8—1910) உத்திராடநாள் தொடங்கி வளர்ந்துள்ள மணிவாசக சங்கத்தின் இருபத்தாறுவது ஆண்டுத் திருவிழாவும் நடைபெறும்.

நிகழ்ச்சி விவரம்.	தாது௵ சித்திரைமீ	1936 ஏப்ரல்	கிழமை	உதயாதி நாழிகை.
அனுக்ஞை, விக்னேசுவர பூஜை	எவ	19வ	ஞாயிறு	அஇ—ககவ
வாஸ்துசாந்தி முதலியன	க௦வ	22வ	புதன்	ருசுஇ—ருஅஇ
மிருத்சங்கிரகணம்	ககவ	23வ	வியாழன்	கரு—கஎஇ
அங்குரார்ப்பணம் ரக்ஷாபந்தனம்	கஉவ	24வ	வெள்ளி	சாருஇ—சசஇ
கலாகர்ஷணம், யாகாரம்பம்	,,	,,	,,	ருசுஇ—ருஅஇ
தருணாலய கும்பாபிடேகம், மகாபிடேகம்	கசவ	26வ	ஞாயிறு	க௦வ—ககவ
வித்தியாசாலைத் தாபனம்	,,	,,	,,	கஅஇ—உகவ
மணிவாசக சங்கத் திருவிழா	,,	,,	,,	உகவ—ருரு

சிவநேசச் செல்வர்கள் யாவரும் நண்பர் உறவினருடன் முன்னரேவந்து குழுமி கண்டும் கேட்டும் திருவருளின்பம் பெற்று வாழவேண்டிக்கொள்கிறேன்.

யுவ பங்குனி உ௦வ
1—4—1936
திருத்தேன்குடித்திட்டை

சிவதிருப்பணித் தொண்டன்,
ராம. கு. ராம. இராமசாமி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தென்குடித்திட்டை

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

பண்-கொல்லி (மூன்றாந் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

1. முன்னைநான் மறையவை முறைமுறை குறையொடும்
தன்னதா டொழுதெழ நின்றவன் றன்னிடம்
மன்னுமா காவிரி வந்தடி வருடநல்
செந்நெலார் வளவயற் றென்குடித் திட்டையே.

2. மகரமா டுங்கொடி மன்மத வேடனை
நிகரலா காநெருப் பெழவிழித் தானிடம்
பகரபா ணித்திலம் பன்மக ரத்தொடும்
சிகரமா ளிகைதொகுந் தென்குடித் திட்டையே.

3. கருவினா லன்றியே கருவெலா மாயவன்
உருவினா லன்றியே யுருவுசெய் தானிடம்
பருவநாள் விழவொடும் பாடலோ டாடலும்
திருவினான் மிகுபுகழ்த் தென்குடித் திட்டையே.

4. உண்ணிலா வாவியா யோங்குதன் றன்மையை
விண்ணிலா ரறிகிலா வேதவே தாந்தனூர்
எண்ணிலா ரெழின்மணிக் கனகமா ளிகையிளந்
தெண்ணிலா விரிதருந் தென்குடித் திட்டையே.

5. வருந்திவா னோர்கள்வந் தடையமா நஞ்சுதான்
அருந்தியா ரமுதவர்க் கருள்செய்தா னமருமூர்
செருந்திபூ மாதவிப் பந்தர்வண் செண்பகம்
இருந்துநீள் வளர்பொழிற் றென்குடித் திட்டையே

6. ஊறினா ரோசையுள் ளொன்றினா ரொன்றிமால்
கூறினா ரமர்தருங் குமரவே டாதையூர்
ஆறினார் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே.

7. கானலைக் கும்மவன் கண்ணிடந் தப்பநீள்
வானலைக் குந்தவத் தேவுவைத் தானிடம்
தானலைத் தெள்ளமூர் தாமரைத் தண்டுறை
தேனலைக் கும்வயற் றென்குடித் திட்டையே.

8. மாலொடும் பொருதிறல் வாளரக் கன்னெரிந்
தோலிடும் படிவிர லொன்றுவைத் தானிடம்
காலொடுங் கனகமூக் குடன்வரக் கயல்வரால்
சேலொடும் பாய்வயற் றென்குடித் திட்டையே.

9. நாரணன் றன்னொடு நான்முகன் றானுமாய்க்
காரணன் னடிமுடி காணவொண் ணானிடம்
ஆரணங் கொண்டுபூ சுரர்கள்வந் தடிதொழச்
சீரணங் கும்புகழ்த் தென்குடித் திட்டையே.

10. குண்டிகைக் கையுடைக் குண்டரும் புத்தரும்
பண்டுரைத் தேயிடும் பற்றுவிட் டீர்தொழும்
வண்டிரைக் கும்பொழிற் றண்டலைக் கொண்டலார்
தெண்டிரைத் தண்புனற் றென்குடித் திட்டையே.

11. தேனலார் சோலைசூழ் தென்குடித் திட்டையைக்
கானலார் கடிபொழில் சூழ்தரும் காழியுள்
ஞானமார் ஞானசம் பந்தன செந்தமிழ்
பானலார் மொழிவலார்க் கில்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்.

இது, சோழநாட்டில் காவிரித் தென்கரையிலுள்ளது. தஞ்சாவூருக்கு அணித்தான திட்டை ரயில்வண்டி நிலையத்திலிருந்து மேற்கே முக்கால் மைலில் திட்டையென வழங்குவது. வேதங்களும், விஷ்ணு முதலான தேவர்களும், வசிஷ்டர், கௌதமர், ஆதிசேடன், காமதேனு முதலியோரும் பூசித்தது.

சுவாமியின் திருநாமங்கள்—பசுபதிநாதர், வசிஷ்டேசுவரர், தேனுநாதர் முதலியன.

அம்பிகையின் திருநாமங்கள்—உலகநாயகி, சுகந்த குந்தளாம்பிகை, மங்கள நாயகி யாதியன.

சக்கரதீர்த்தம், பசுதீர்த்தம், காவிரிதீர்த்தம். வில்வாரண்ய க்ஷேத்திரம்.

இக்ஷேத்திரத்திற்குதக்ஷிணகுடித்வீபகம், வசிஷ்டாச்ரமம், தேனுபுரி என்னும் பெயர்களும், சுவாமிக்கு சுயம்பூதேசர், தேனுபுரிநாதர் என்னும் பெயர்களும் தலபுராணத்திலும், தக்ஷிணகுடீசர் என்னும் பெயர் அரசியலாரின் பைமாஷ் கணக்கிலும்காணப் பெறுகின்றன.